பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 06 ஞாயிற்றுக்கிழமை 21.09.2025 கதிர் 315

## இனிது ரகசியம் அல்ல!



வடக்குக்கு ஒரு முகம் தெற்குக்கு ஒரு முகம் என்கிற சிங்களப் பேரினவாதக் கட்சிகளின் கள்ள ஆட்டத்தை தற்போதைய தேசியமக்கள்சக்தியும்ஆடத் ☞2

# ஹிட்லருக்கும் அநுரவுக்கும் பெரிய வேறுபாடுகளில்லை

### உதய கம்மன்பில இப்படிக் காட்டம்





கடும்சர்வாதிகாரியான ஹிட்லருக்கும் அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் பெரும் வேறுபாடுகள் இல்லை. தாய் நாடு பாசிசவாதத்துக்கு இரையாவதைத் தடுப்பதற்கு எதிர்க்கட்சிகளின் தற்காலின ஒன்றிணைவு நிலையானதாக வேண்டும். ரணில் விக்கிரமசிங்க அதற்கு தலைமைத்துவம் வகிக்க வேண்டும் என பிவிதுரு ஹெலஉருமயவின்தலைவர் ☞2

# மாகாண சபைத் தேர்தலை நடத்த ஆளும்தரப்புக்கு தயாசிறி சவால்

மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு ஆளும்தரப்புக்கு சவால் விடுக்கின்றோம். 9 மாகாண சபைகளில் பெரும்பான்மையானவற்றை ஒருமித்து நாம் கைப்பற்றுவதற்கான வேலைத்திட்டங்களை இப்போதிருந்தே ஆரம்பிப்பதற்கு அனைத்து எதிர்க்கட்சிகளுக்கும் அழைப்பு விடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 79ஆவது சம்மேளனத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரிந்தால் தோல்வி என்பது கடந்த தேர்தல்களில் எமக்குநன்றாகபுரியவைக்கப்பட்டது. ஐ.தே.கவிலேயே பிளவுகள் தொடங்கின. 77 ஆண்டுகளின் பின்னர் பிளவுகளை ரணில் விக்கிரமசிங்கவால் சரி செய்ய முடிந்துள்ளது. கட்சிகள் பிளவடைந்தாலும் நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டது. பல ☞2

# போக்குவரத்துச் சபைக்கு 450 பெண் சாரதிகள் விரைவில்

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க அறிவிப்பு

இலங்கை போக்குவரத்து சபையில் பெண் ஊழியர்கள் உட்பட 450 சாரதிகள் மற்றும் 300 நடத்துனர்களை நியமிக்க ஆளும்தரப்பு திட்டமிட்டுள்ளதாகவும் அதற்கான நேர்காணல்கள் தற்போது இடம்பெற்றுவருவதாகவும் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து, சிவில் விமான போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

25 பேருந்து நிலையங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பேருந்து நிலையங்களில் அதிகமாக வேலை செய்பவர்களுக்கு அதிக ஊதியம் வழங்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும், இந்த நிறுவனங்கள் மக்களுக்கு முழுமையாக சேவை செய்யும் திறமையான நிறுவனங்களாக மாற்றப்படவேண்டும் என்றும் அவர் இதன்போது தெரிவித்தார். ☞6

# பல கட்சி ஜனநாயக முறையை ஒழிக்க ஆளும்தரப்பு முயற்சி

### ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு

நாட்டில் பல கட்சி ஜனநாயக முறைமையை முற்றாக அழிப்பதற்கும், எதிர்க்கட்சிகளை முடக்குவதற்கும் ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. ஆளும்தரப்பின் இந்த முயற்சியை எதிர்த்து அனைவரும் ஒருமித்து குரல் கொடுக்க வேண்டும். என்னை கைது செய்தபோது ஏற்பட்ட இந்த ஒற்றுமை இந்த மேடையோடு நின்று விடக் கூடாது. இது எதிர்கால அரசியல் நோக்கி முன்னோக்கிக் கொண்டு செல்லப்பட வேண்டுமென முன்னாள் அரசுத் தலைவர்யும், ஐக்கிய ☞6

# 77 ஆண்டுகளாக நாட்டுக்கு எந்தச் சேவையும் செய்யாத ஒரு குழு ஆட்சியைப் பிடித்துள்ளது

### ஐ.தே.க. தேசிய மாநாட்டில் பெரமுனவின் செயலர் குமுறல்

சுதந்திரத்துக்கு பின்னர் இரு பிரதான முகாம்களே நாட்டில் ஆட்சியமைத்துள்ளன. அவையிரண்டும் அதிகாரத்துக்காக முரண்பட்டுக் கொண்டன. இது நாம் இழைத்த பெருந்தவறாகும். 77 ஆண்டுகளாக நாட்டுக்கு எந்த சேவையும் செய்யாத ஒரு குழு இதனைப் பயன்படுத்திக் கொண்டு ஆட்சியைக் கைற்றியுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரிவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் 79ஆவது சம்மேளனத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.தே.க.விலிருந்து முற்றிலும் வேறுபட்ட கொள்கையைப் பின்பற்றும் கட்சியின் செயலாளராக இந்த சம்மேளனத்தில் ☞2

# தேர்தல் சட்டங்களை திருத்துவதற்கு ஆளும்தரப்புக்கு இடமளிக்கக்கூடாது

### மு.கா. தலைவர் ஹக்கீம் எடுதுரைப்பு

தேர்தல்முறைமைகளில்தேவைற்ற திருத்தங்களை முன்வைத்து சிறு கட்சிகளின் பிரதிநிதித்துவத்தை நீக்க நினைத்தால் அது ஆட்சியமைக்க எதிர்பார்த்துள்ளவர்களுக்கும் பேரழிவை ஏற்படுத்தும். இவ்வாறு அநாவசியமாகதேர்தல்முறைமைகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஆளும்தரப்புக்கு இடமளிக்ககூடாது. இதற்காக எதிர்க்கட்சிகளுக்குள் ☞2

# ரணில், சஜித் இருவர் இணைவு அடுத்த ஆண்டுக்குள் கட்டாயம்

### சாமர சம்பத் எம்.பி. தெரிவிப்பு

ரணில் - சஜித் அடுத்த ஆண்டுக்குள் இணைய வேண்டியது கட்டாயமாகும். அரசுத் தலைவர் தேர்தலில் இணைந்து களமிறங்கியிருந்தால் நாமே ஆட்சியமைத்திருப்போம். எனவே இருதரப்பும் இணையாமல் எம்மிடம் பேச்சுக்கு வரக்கூடாதென புதிய ஜனநாயக முன்னணியின் (சிலிண்டர்) நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 79ஆவது சம்மேளனத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடுத்த ஆண்டுக்குள் ரணில் - சஜித் இணைய வேண்டியது கட்டாயமாகும். ஐக்கிய தேசிய கட்சியென்பது ஒரேயொரு ஆசனத்தைக் கொண்டு நாடாளுமன்றத்தை பாதுகாத்த கட்சியாகும். இந்த கட்சி என்றும் வீழாது, வீழ்த்தவும் முடியாது.

நான் இந்த கட்சியை நேசிக்கவில்லை. ☞2

# மின்சார சபை ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் பேச்சின் இடைநடுவே எழுந்து வெளிநடப்பு

மின்சாரசபைஊழியர்களுக்கும், மின்சார சபைத் பிரதானிகளுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போது, மின்சார தொழிற்சங்க உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்துவெளிநடப்புசெய்துள்ளனர்.

இலங்கை மின்சார சபைத் தலைமையகத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் 25 அமைச்சுக்களின் செயலாளர்களும் மூன்று தொழிற்சங்க பிரதிநிதிகளும் பங்கேற்ற நிலையில் இலங்கை மின்சார சபை மறுசீரமைப்புக்கு பொறுப்பான பணிப்பாளர் பங்கேற்றிருந்தமையினால் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து மின்சார தொழிற்சங்க உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்ததாக அறிவித் துள்ளனர்.

இந்நிலையில்மின்சாரத்தொழிலாளர்களின் சட்டப் படி வேலை செய்யும் போராட்டம் இன்று வரை தொடரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தொடங்கியிருப்பதைதியாகிதிலீபனின்நினைவு நாள் நிகழ்வுகள் அம்பலப்படுத்தியுள்ளன. திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் தொடங்கியுள்ளநிலையில், முதலில்அமைச்சர் சந்திரசேகரனும் அவரது பரிவாரங்களும் அஞ்சலி திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்துவதற்காகச் சென்றார்கள். அங்கு அவரைத் தடுத்து நிறுத்தியதால் சர்ச்சை எழுந்தது. அது குறித்துக் கண்டனங்களும் எழுந்தன. அதன் பின்னரும் தேசிய மக்கள் சக்தியினர் பலர் திலீபனின் நினைவிடத்திற்குச் சென்று அஞ்சலி செலுத்தினர் என்றும் அப்போது முதலில் முரண்பட்டவர்கள் பார்வையாளர்களாக இருந்தனர் என்று அமைச்சர் சந்திரசேகரனே பதிலளித்திருந்தார். என்னை அஞ்சலி செலுத்தவிட மறுத்தால் பதிலடியாக இன்னும் பலர் அங்கு அனுப்பப்படுவார்கள் என்ற வீம்பு அவரது பதிலில் தெரிந்தது. நேற்று திலீபனின் ஆவணக் காப்பகம் திறக்கப்பட்ட பின்னர் ஆளும்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் அங்கு சென்று அஞ்சலி செலுத்தியுள்ளார்.

அமைச்சர் சந்திரசேகரனும் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவனும் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தியமை வெறும் அரசியல் கண்கவர் நடவடிக்கை மட்டுமே என்பதை அடித்துக்கூறலாம். இவர்கள் இருவரும் இன்று நேற்று குடாநாட்டிற்கு வந்தவர்களலல்லர். சந்திரசேகரன் மலையகத்தைச் சேர்ந்தவர் என்றாலும் கடந்த பல ஆண்டுகளாக, கிட்டத்தட்ட ஒருதசாப்தமாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுபவர். ரஜீவன் இங்கேயே பாடசாலை ஆசிரியராக, அதிபராகப் பணியாற்றியவர். இவர்களில் எவரும் கடந்த 10 ஆண்டுகளில் திலீபனிற்கு அஞ்சலி செலுத்த வந்தவர்களில்லை. அந்தப் பக்கம் தலை வைத்தும் படுத்தவர்களில்லை. நினைவேந்தல்கள் அரசுப் படையினரால் குழப்பப்பட்டபோதும் நினைவேந்தல்களைச் செய்தவர்கள் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டபோதும் அதற்கெதிராக ஒரு தடவையேனும் குரல் கொடுத்தவர்களில்லை. தமிழர்களின் நினைவேந்தல் உரிமைகளுக்காகப் போராடியவர்களும் இல்லை.

இப்போது மாகாண சபைத் தேர்தல் வந்தால் தமிழ் மக்கள் முன் செல்வதற்காக இந்தக் கேவலமான வேடத்தைப் போடப் பார்க்கிறார்கள். இது வெறும் வாக்கு அரசியலுக்கான நாடகம். விடுதலைப்புலிகளின் நினைவேந்தலை அங்கீகரிப்பது இதுவரையில் ஆளும்தரப்பின் கொள்கையல்ல. ஜெனிவாவில் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று கூறிக்கொண்டு தலீபனுக்கு அஞ்சலி செலுத்துவது என்பது என்.பி.பி. ஆளும்தரப்பின் கொள்கையாக எப்படி இருக்க முடியும்? கிழக்கில் நினைவேந்தல்களைக் குழப்பும் பொலிஸாரைப் பதவியில் வைத்துக்கொண்டு வடக்கில் திலீபனுக்கு அஞ்சலி செலுத்துவது எப்படி ஆளும்தரப்பின் கொள்கையாக இருக்க முடியும்?

அதிலும்கூட மிக மிகக் கவனமாக ஆளும்தரப்பின் தமிழ் முகங்களை மட்டுமே இத்தகைய அஞ்சலிக்கு அனுப்புகிறார்கள். அண்மையில் யாழ்ப்பாணம் வந்து சென்ற ஜேவிபியின் வடக்கு அமைப்பாளரான அமைச்சர் விமல் ரத்நாயக்க திலீபனின் நினைவிடப் பக்கம்கூடத் திரும்பிப் பார்க்கவில்லை. அவர், நினைவஞ்சலி செலுத்தினால், அது சிங்கள மக்களின் கவனத்திற்குரியதாகும். அதனால் தெற்கில் வாக்குச்சேதாரம் ஏற்படும். எனவே எந்தவொரு சிங்கள அமைச்சரும் ஒருபோதும் திலீபனுக்கு அஞ்சலி செலுத்த மாட்டார்கள். அதுபோன்றே சிங்கள மக்களும் வாழும் கிழக்கில் திலீபனின் நினைவேந்தல் குழப்பப்படுகின்றது. அதைச் செய்த அதிகாரிகள் தண்டிக்கப்படவுமில்லை, இடமாற்றப்படவுமில்லை. ஏனெனில் அப்படிச் செய்யவில்லை என்றால் அங்கும் ஆளும்தரப்புக்கு வாக்குச் சேதாரம் ஏற்படும். ஆக, வடக்கில் அதுவும் வவுனியாவிற்கு வடக்கே மட்டுமே இந்த அஞ்சலி நாடகம் எல்லாம். அது தமிழ் மக்கள் மத்தியில் வாக்குகளைப் பெறுவதற்கான நடிப்பு மட்டுமே.

மேலாக விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாதிகள் பட்டியிலில் வைத்துத் தடைசெய்துள்ள இந்த ஆளும்தரப்பு, இறந்தவர்களுக்காக நினைவேந்தல்கள் நடத்தலாம் ஆனால் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரிக்கவோ அவர்களை நினைவுகூரவோ அனுமதியில்லை என்று கூறும் ஆளும்தரப்பொன்றின் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினரும் திலீபனுக்கு அஞ்சலி செலுத்துவது என்பது அரசியல் கபடத்தனத்தின் உச்சம் தவிர வேறு எதுவுமில்லை. தமிழ் மக்கள் அவ்வளவு ஏமாளிகள் என்று கணிக்கின்றது ஜேவிபி தலைமையிலான என்பிபி. மாகாண சபைத் தேர்தலில் மக்கள்தான் இதற்கான பதிலைச் சொல்லவேண்டும்..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com

## ஹிட்லருக்கும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 79ஆவது சம்மேளனத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்தும் தெரிவித்ததாவது:

தாய் நாடு பெபரும் சர்வாதிகார அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள சூழலிலேயே ஐ.தே.க.வின் தேசிய மாநாடு இடம்பெறுகிறது. இலங்கையானது தொடர்ந்தும் ஜனநாயக நாடாகவே இருக்குமா அல்லது பாசிசவாதத்துக்கு இரையாகுமா என்ற அச்ச நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த பாசிசவாதிகள் ஆயுதங்களுடன் ஆட்சியைக் கைப்பற்றவரும் போது அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பது எமக்குத் தெரியும். இவர்களை எதிர்கொள்வதற்கு எமது இராணுவத்துக்கு சுயாதீனமான உரிமையுள்ளது.

ஆனால் தற்போது தேசாபிமானிகள் என்ற போர்வையில் மக்கள் ஆணையுடன் பாசிசவாதிகள் ஆட்சியைக் கைப்பற்றியிருக்கின்றமை எமக்கு புதிய அனுபவமாகும். ஹிட்லர் ஜேர்மனில் அதிகாரத்தைக்கைப்பற்றியமைக்கும், தற்போது ஜே.வி.பி. ஆட்சியமைத்துள்ளமைக்கும் இடையில் பல ஒற்றுமைகள் உள்ளன. நேற்று நாமலுக்கு நடக்கவிருந்தது, அண்மையில் ரணிலுக்கு நடந்தது நாளை எமக்கும் நடக்கலாம். இந்த பாசிசவாதிகள் இன்னும் என் பக்கம் திரும்பவில்லை என்று ஒவ்வொருவரும் அமைதியாக இருந்தால் அது பாரிய ஆபத்தாகும்.

வரலாற்றில் தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். கொள்கைகளிலும் பெரும் மாற்றங்கள் இருக்கலாம். அவற்றில் எது சிறந்தது என்று தேர்ந்தெடுக்க வேண்டுமெனில் அதற்கு இந்த நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கும் முதலாவதாக வாழ்வதற்கான உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.

அரசுத்தலைவர் தொழிற்சங்கங்கத்தினை அச்சுறுத்துப்போதும், கட்சி செயலாளர்கள் நாம் ஆட்சியைக் கைப்பற்றியது மீள கொடுப்பதற்கு அல்ல என்று கூறும் போதும், உயிர் தியாகம் செய்தாவது அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வோம் என்று நகர மேயர்கள் கூறும் போது ஹட்லர் நினைவுக்கு வருகிறார்.

அநுர திஸாநாயக்க, ஹிட்லரின் மறு உருவமா என்ற நியாயமான சந்தேகம் எழுகிறது. உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு முன்னர் எதிர்க்கட்சிகளின் கூட்டணியமைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியடைந்தது. ஆனால் ரணில் விக்கிரமசிங்க விளக்கமறியலில் வைக்கப்பட்டதால் அந்த முயற்சி இப்போது வெற்றியளித்துள்ளது. ரணில் கைது செய்யப்பட்டமை நாம் விரும்பாத ஒரு சம்பவம் என்ற போதிலும், அந்த சம்பவம் நாட்டில் வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வுகள் இடம்பெற வழிவகுத்துள்ளது.

அன்று உருவாகிய தற்காலிக ஒற்றுமையை நிலையானதாக வேண்டும். அந்த ஒற்றுமையை இந்த பாசிசவாதத்தை தோற்கடிக்கும் வரை பேணிச் செல்ல வேண்டியது இன்று எம் கைகளிலுள்ள சவாலாகும். அதற்கான தலைமைத்துவத்தை ரணில் விக்கிரமசிங்க வகிக்கவேண்டும். அவரால் மாத்திரமே அது முடியும் என்று நாம் நம்புகின்றோம்- என்றார்.

## 77 ஆண்டுகளாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்கேற்றுள்ளேன். சுதந்திரத்துக்கு பின்னர் ஐ.தே.க. அல்லது சுதந்திர கட்சியே நாட்டை ஆட்சி செய்துள்ளது. இந்த இரு முகாம்களும் நாட்டில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. ஆனாலும் அதிகாரத்துக்காக முரண்பட்டு எமது இரு தரப்புக்களும் பாரிய தவறிழைத்திருக்கின்றன.

ஒருவரையொருவர் குற்றஞ்சுமத்தி இரு தரப்புக்களுமே இந்தத் தவறுகளை இழைத்துள்ளன. இதனைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டுக்கு கடந்த 77 ஆண்டுகளாக எந்த சேவையும் செய்யாத குழு இன்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. இறுதியில் இந்த இரு தரப்புக்களும் கள்வர்கள் என்றும், வன்முறையாளர்களே நாட்டை நேசித்தவர்கள் என்றும் மக்கள் நம்பினர்.

அதன் விளைவாக நாடு மிகவும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது. 15 ஆண்டுகளுக்கு தேர்தல் நடத்தப்பட மாட்டாதென கட்சி செயலாளர்கள் பயமின்றி கூறும் சூழலே காணப்படுகிறது. இவ்வாறான ஜனநாயக விரோத சூழல் உருவாகுவதைத் தடுக்க வேண்டும். ஜனநாயகத்தை பாதுகாத்த தலைவர் என்ற ரீதியில் மஹிந்த ராஜபக்ச அதற்கான முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவார். அதற்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இணைந்து பயணிக்க நாம் தயார் என்றார்.

## மின்சார சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேநேரம் எதிர்கால தொழிற்சங்க நடவடிக்கை குறித்து செம்டெம்பர் 24 தீர்மானிக்கவுள்ளதாகவும் மின்சார தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

## மாகாண சபைத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தசாப்தங்கள் நாடு அபிவிருத்தியடைவதை தடுத்துக்கொண்டிருந்தவர்கள் இளைஞர்களை மூளை சலவை செய்துள்ளனர்.

இவர்கள் நாடாளுமன்றத்தை தமது தேவைக்கேற்ப மாற்றுவோம் எனக் கூறுகின்றனர். அவ்வாறு செய்வதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். எனவே இந்த ஒன்றிணைவை ஆசீர்வாதமாகவே நாம் பார்க்கின்றோம். அழைப்பு விடுக்கப்படாமலேயே ரணில் விக்கிரமசிங்கவுக்காக அனைவரும் ஒன்றிணைந்தனர். இதனால் ஆளும்தரப்புக்கு மண்டியிட நேர்ந்தது.

அவ்வாறில்லை எனில் எதிர்தரப்பினர் அனைவரையும் அடுத்தடுத்து கைது செய்திருப்பர். எதிர்க்கட்சி அரசியல்வாதியாக இருக்கும் ஒரேயொரு காரணத்துக்காக அவர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

வரலாற்றில் முதன்முறையாக அரசியல் மேடையேறியவர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரால் அனைவரும் இலக்கு வைக்கப்படுகின்றனர்.

கைது செய்யப்படுவதற்கு முன்னரே யார் கைது செய்யப்படப் போகின்றனர் என அமைச்சர்கள் கூறுகின்றனர். பங்களாதேஷாகவோ நேபாளமாகவோ இலங்கை மாறுவதை ரணில் விக்கிரமசிங்கவே தடுத்தார். அதற்காக அவர் அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்தினார். ஆனால் அவர் அதன் ஊடாக மனித உரிமைகளை மீறியதாகக் கூறப்படுகிறது. இதற்கு எம்மிடம் பதில் இல்லை. இன்று அநுர ஆட்சிசெய்வதற்கு நாடு எஞ்சியிருக்கிறது என்றால் அது ரணில் விக்கிரமசிங்கவால்தான்.

ரணில் வழங்கிய கையிருப்பு ஓராண்டு கடந்தும் அவ்வாறே இருக்கிறது. இவ்வாறு தொடர்ந்தும் பயணிக்க முடியாது. இந்த ஆளும்தரப்பு நீண்டகாலம் பயணிக்காது. நாம் அனைவரும் இணைந்து இவர்களை வீட்டுக்கு அனுப்புவதற்கான வேலைத்திட்டத்தை தொடங்குவோம். மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு ஆளும்தரப்புக்கு சவால் விடுக்கின்றோம். 9 மாகாணசபைகளில் பெரும்பான்மையானவற்றை ஒருமித்து நாம் கைப்பற்றுவோம் என்றார்.

## தேர்தல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணக்கப்பாட்டை ஏற்பாடுத்திக் கொள்ள வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் 79ஆவது தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸ் வரலாற்று ரீதியில் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து முக்கிய தீர்மானங்களை எடுத்து அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பயணித்து வந்த ஒரு கட்சியாகும். உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தமதுகட்சிக்குவாக்களிக்காவிட்டால், அவற்றுக்கு நிதி ஒதுக்கப்பட மாட்டாது என அரசுத் தலைவர் அநுர பகிரங்கமாகவே தெரிவித்திருந்தார். இதேபோன்று ஆளுந்தரப்பிலுள்ள பலரும் பல கதைகளைக் கூறிக் கொண்டிருக்கின்றனர்.

கடந்த ஆட்சிகாலங்களில் ஆரம்பிக்கப்பட்ட சகல அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தங்களால் நிறுத்திய ஜே.வி.பி. இன்று, வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் தொழிற்சங்கங்களை அச்சுறுத்துகின்றது. கட்சி அலுவலக பிரச்சினைக்காக பொதுவெளியில் ஆளும்தரப்பு எவ்வாறு செயற்பட்டது என்பதையும் பார்த்தோம். இது மிகவும் அபாயம்மிக்க சர்வாதிகாரத்தை நோக்கிய பயணமாகும்.

வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் வீசி எறிந்து கொண்டிருக்கும் ஆளும்தரப்பு, தேர்தல் முறைமையில் கைவைத்துள்ளது. அரசாங்கமொன்றுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தால் அதன் நடத்தை எவ்வாறிருக்கும் என்பதை நாம் அறிவோம். எம்மால் முன்வைக்கப்பட்ட தேர்தல் முறைமையின் காரணமாகவே 3 சதவீதமாகக் காணப்பட்ட ஜே.வி.பி.க்கு கூட உள்ளூராட்சிமன்றங்களில் பிரதிநிதித்துவம் கிடைத்தது. அந்த முறைமை இல்லாதொழிக்கப்பட்டால் நீங்கள் எதிர்க்கட்சிக்கு வரும் போது அது எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில், பிரதமராக பதவி வகித்த போது சமர்ப்பித்த மாகாணசபை முறைமையை நாம் கடுமையாக எதிர்த்தோம். ஆனால் இன்று 12 ஆண்டுகளாக மாகாணசபைகள் இல்லை. தேர்தல் முறைமைகளில் தேவைவற்ற திருத்தங்களை முன்வைத்து சிறு கட்சிகளின் பிரதிநிதித்துவத்தை நீக்க நினைத்தால் அது ஆட்சியமைக்க எதிர்பார்த்துள்ளவர்களுக்கும் பேரழிவை ஏற்படுத்தும். இவ்வாறு அநாவசியமாக தேர்தல் முறைமைகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு இந்த ஆளும்தரப்புக்கு இடமளிக்கக்கூடாது. இதற்காக எமக்குள் இணக்கப்பாட்டை ஏற்பாடுத்திக் கொள்ளவேண்டும் என்றார்.

## ரணில்,.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் கட்சி தலைவரை நேசிக்கின்றேன். அதனால்தான் அவர் கைதுசெய்யப்பட்டபோது விடியும் வரை சிறைச்சாலை வளாகத்தில் காத்திருந்தேன்.

ஏனைய கட்சிகளின் 133 வாக்குகளுடன் ஐ.தே.கவின் ஒரேயொரு வாக்குடன் நாம் அரசுத் தலைவராக்கிய ரணில் விக்கிரமசிங்க அதல பாதாளத்திலிருந்து நாட்டைக் கட்டியெழுப்பினார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்ட அமைச்சர் பிமல் ரத்நாயக்க, நாட்டுக்காக ரணில் என்ன செய்திருக்கின்றார் என்று கேட்டார். ரணில் ஒரேயொரு விடயத்தை தவிர ஏனைய அனைத்தையும் செய்திருக்கின்றார்.

அதாவது 2022இல் நாடாளுமன்றத்தை தீக்கிரையாக்க முயற்சித்த ஜே.வி.பியினரை சிறையிலடைப்பதைத் தவிர ரணில் ஏனைய அனைத்தையும் செய்திருக்கிறார். அதைச் செய்திருந்தால் இன்று அனைவரும் சிறையில் இருந்திருப்பார்கள்.

மஹிந்த ராஜபக்சவால் விமான நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டபோது, விமான நிலையம் அமைத்து அங்கு விமானம் வந்தால் அது செய்தியா என்று அநுர கேள்வியெழுப்பினார்.

அவ்வாறெனில் பேருந்து தரிப்பிடத்துக்கு நிறப்பூச்சுப் பூசுவது மாத்திரம் என்ன செய்தியா என்று நான் அவரிடம் கேட்கின்றேன். நாடாளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் நாம் ஆளும்தரப்புக்கு எதிரான அனைத்தையும் செய்வோம்.

எமக்கும், பொதுஜன பெரமுனவுக்கும் என அனைவருக்குமாக 65 இலட்சம் வாக்குகளே உள்ளன. ஆனால் சஜித் தரப்புக்கு தனியாக 65 இலட்சம் வாக்குகள் உள்ளன.

எமது வாக்குகளே அநுரவிடமுள்ளன.

தொடர்ச்சி 6ம் பக்கம்....

# ரணிலும் சஜித்தும் இணைய நான் முயற்சிகளை எடுப்பேன்

## மனோ கணேசன் தெரிவிப்பு

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான சஜித் பிரேமதாசவும் இணைய வேண்டிய சந்தர்ப்பம் தற்போது உருவாகியுள்ளது. அதற்காக பணிகளை நான் பின்னணியிலிருந்து முன்னெடுப்பேன். இது கள்வர்களின் கூடாரம் அல்ல. இந்த ஒற்றுமை அரசியல் ரீதியானதாகவும், ஒருமித்த இலங்கைக்குள் சிறப்பான எதிர்காலத்துக்கானதாகவும் அமைய வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 79ஆவது சம்மேளனத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இது ஐக்கிய தேசிய கட்சியின் 79ஆவது சம்மேளனம் மாத்திரமல்ல. மாறாக அனைவரும் ஒன்றிணைவதற்காக தளமாகும். நாம் ஐக்கிய மக்கள் கூட்டணியில் உத்தியோகபூர்வமாக அங்கத்துவம் வகிக்கின்றோம்.

ஐக்கிய தேசிய கட்சி தாய்வீடென்றால் அதன் தந்தை ரணில், அவரது மூத்த புத்திரன் சஜித் ஆவார். இந்த குடும்பத்தின் தகராறுகளில் நாம் தலையிடுவதில்லை. காரணம் நாம் அயல் வீட்டார். தாய் வீட்டிலிருந்தவர்களே ரணிலை கைவிட்டுச் சென்றபோது நாம் அவருடன் நின்றிருக்கின்றோம். எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் கொள்கைகளைக் காட்டிக் கொடுக்கவில்லை. காட்டிக் கொடுக்கப் போவதுமில்லை.

இப்போதும் நான் உங்கள் புதல்வரின் கூட்டணியிலேயே இருக்கின்றேன். தற்போது தந்தையும் புதல்வனும் இணைவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. நாம் பின்னணியிலிருந்து அதற்கான பணிகளை முன்னெடுப்போம் . 77 ஆண்டு சாபம் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. அது உண்மையெனில் அதில் 51 சதவீத பங்களிப்பு தற்போது ஆட்சியமைத்திருக்கும் ஜே.வி.பி.யினரதாகும். நாம் முட்டாள்கள் அல்ல. அவர்களைப் பற்றி நாம் நன்கு அறிவோம்.

வரலாற்றில் பல சந்தர்ப்பங்களில் நாம் தவறிழைத்திருக்கின்றோம். இது பல்லின மக்கள் வாழும் நாடு என்பதற்கு அப்பால் பிரிவினைவாதங்களுடன் செயற்பட முற்பட்டபோதே எமது தவறுகள் தொடங்கின. இதனால் ஜனநாயக கட்சிகள் பிளவடைந்தன. இவற்றை விடுத்து நாம் முன்னோக்கிச் செல்லவேண்டும். ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை, நாம் மீண்டும் இணைவதற்கான வாய்ப்பினை உருவாக்கியிருக்கிறது. இதனை கள்வர்களின் கூடாரம் என ஆளும்தரப்பு கூறுகிறது. அதை நாம் முற்றாக நிராரிக்கின்றோம்.

கள்வர்களா இல்லையா என்பதை நீதிமன்றம் தீர்மானிக்கும். ஆளும்தரப்பு சட்டத்தை கைகளில் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. முன்னாள் அரசுத் தலைவர் ரணில் ஊழல், மோசடி குற்றச்சாட்டில் கைது செய்யப்படவில்லை. நபரொருவர் அரசுத் தலைவராகப் பதவி வகிக்கும் காலப்பகுதியில் எந்தெந்த சந்தர்ப்பத்தில் அவர் அரசுத்தலைவருக்குரிய சிறப்புரிமைகள் நீங்குகின்றன என்பதையும், தனிப்பட்ட விடயங்கள் எங்கு ஆரம்பிக்கின்றன என்பதையும் வரையறுத்து தெரியப்படுத்துமாறு அரசுத் தலைவர் அநுரவை வலியுறுத்துகின்றேன். நாடாளுமன்றத்தில் சட்டமொன்றை நிறைவேற்றுங்கள்.

அதேபோன்று வெளிநாடுகளுக்குச் செல்லும் போது அவை தொடர்பில் கண்காணிப்பதற்கான பொறிமுறையொன்றையும் உருவாக்குங்கள். எதிர்க்கட்சி தலைவரின் தலைமைத்துவத்தின் கீழ் நாம் அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றோம்.

இது பௌதீக ஒற்றுமையாக மாத்திரமின்றி அரசியல் ரீதியான ஒற்றுமையாகவும் நாட்டை மேம்படுத்துவதற்கானதாகவும் அமைய வேண்டும். பிளவற்ற இலங்கைக்குள் ஒற்றுமையான எதிர்காலத்தை நோக்கி பயணிக்க வேண்டும். அதற்கான தலைமைத்துவத்தை ரணில் விக்கிரமசிங்க வழங்க வேண்டும் என்றார்.




# புறக்கோட்டையில் கட்டடத்தில் தீ

கொழும்பு- புறக்கோட்டை முதலாம் குறுக்குத் தெருவில் உள்ள ஒரு கட்டடத்தின் மூன்றாவது மாடியில் நேற்று சனிக்கிழமை திடீர் தீப்பரவல் ஏற்பட்டது.

6 தீயணைப்பு வாகனங்களின் ஒத்துழைப்புடன் சில மணித்தியாலங்களின் தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

விமானப்படை தீயணைப்பு பிரிவும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தது. எனினும் தீப்பரவலுக்கான காரணம் கண்டறியப்படவில்லை என்றும், அது குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீ விபத்தால் ஏற்பட்டுள்ள சொத்து சேதம் மற்றும் ஏனைய காரணிகள் குறித்தும் விசாரணைகள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் போது உயிர் சேதங்கள் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## புதிய மாற்றம் நிலைபெறட்டும்

இலங்கையில் நீண்டகாலமாகக் கவனிக்கப்படாமல் விட்டுச் செல்லப்பட்ட மிகப் பெரிய சமூகப் பிரச்சினை ஒன்று உள்ளது. அது பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான வன்முறை. எண்ணிக்கை அதிர்ச்சியளிக்கும் அளவில் உயர்ந்து வருவதாகும். 2023ஆம் ஆண்டில் மட்டும், குழந்தைகள் மீதான வன்கொடுமைகளைச் சார்ந்த ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் இருந்தன. உயர் நீதிமன்றங்களில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பாலியல் குற்றச்சாட்டுகளில் மூன்றில் ஒன்று குழந்தைகளுடன் தொடர்புடையது. அதே ஆண்டில், 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்ப வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இந்த ஆண்டில் இதுவரையிலான காலத்தில் 118 பெண்களும் 28 சிறுவர்களும் இணையவழியிலான ஏமாற்றுதல்கள் மூலம் பாலியல் குற்றங்களுக்குள் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள் என்று காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

2019ஆம் ஆண்டு பெண்கள் நலனுக்கான கணக்கெடுப்பின்படி, இலங்கையில் ஐந்து பெண்களில் இருவர் தங்கள் வாழ்க்கைத் துணையிடமிருந்து வன்முறையை எதிர்கொள்கின்றனர். மேலும், பெண்களின் இறப்புகளில் மூன்றில் ஒன்று வாழ்க்கைத் துணையால் நிகழ்த்தப்படும் வன்முறை காரணமாக நிகழ்வதாகப் பதிவாகியுள்ளது. இவை எளிய புள்ளிவிவரங்கள் அல்ல, சமூகத்தின் அடித்தளத்தையே உறையவைக்கும் சாட்சிகள்.

### நீதிமுறை தாமதத்தின் சுமை

இலங்கை நீதித்துறை மெதுவான செயல்முறைக்காகப் புகழ்பெற்ற ஒன்று. பெண்கள் மற்றும் குழந்தைகளைச் சார்ந்த வழக்குகள் பல ஆண்டுகளாக நீதிமன்றங்களில் இழுத்தடிக்கப்படுகின்றன. பாதிக்கப்பட்டவர்கள் விரைவான நீதி பெற முடியாமல் துன்புறுகின்றனர். குழந்தைகள் தொடர்பான வழக்குகளில், சாட்சியமளிக்கும் சூழ்நிலைகளும் சட்ட நடைமுறைகளும் இன்னமும் காலனித்துவக் கட்டமைப்பில் சிக்கித் தவிக்கின்றன.

காவல்துறையினரின் விசாரணைகளில் இருந்து வழக்கறிஞர்கள் வரை, பல்வேறு நிறுவனங்கள் தனித்தனி வழிகளில் செயல்படுகின்றன. ஒருங்கிணைப்பு இல்லாததால் வழக்குகள் தாமதமடைகின்றன. தரவுகள் மையப்படுத்தப்படாமல் இருக்கிறது. அமைச்சகத்திலிருந்து தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் (NCPA), சட்ட உதவி ஆணையம் (Legal Ai- Commission) வரை பல்வேறு அமைப்புகள் தனித்தனியாக செயல்படுகின்றன. இதனால் நேரமும் நீதியும் வீணாகின்றன.

### புதிய முயற்சியின் தொடக்கம்

இந்த சிக்கலைக் களைவதற்கான முயற்சிகள் நீண்டகாலமாக எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அவை பேச்சுக்களோடு மட்டுமே நின்று விடுகின்றன. ஆனால், புதன்கிழமை ஒரு புதிய மாற்றத்தின் தொடக்கம் கண்டு மகிழ முடிந்தது. நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சகமும், பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார அமைச்சகமும், ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன், யூனிசெஃப் (UNICEF) மூலம் புதிய மாதிரி சேவையை அறிமுகப்படுத்தின.

இந்த மாதிரி சேவை, குழந்தைகளுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் நிகழ்ந்த தருணத்திலிருந்தே, காவல்துறை புகார், தொலைபேசி உதவி எண்கள், அடுத்தகட்ட பாதுகாப்பு வரை விரைவான, குழந்தை நட்பு முறையில் உதவி கிடைக்கச் செய்யும்.

இது ஆறு முக்கிய முன்முயற்சிகளை உள்ளடக்கியுள்ளது:

1929 தொலைபேசி உதவி எண்களை வலுப்படுத்துதல்
வழக்கு மேலாண்மையை ஒருங்கிணைத்தல்
குழந்தைகளுக்கான உதவி சேவைகளை மேம்படுத்துதல்
நீதிமன்ற செயல்முறைகளை வேகப்படுத்துதல்
குழந்தைகள் சாட்சி வழங்கும் முறைகளை சீரமைத்தல்
குழந்தை நட்பு நீதிமன்றங்கள் மற்றும் சாட்சி அறைகளை அமைத்தல்

இவை அனைத்தும் குழந்தைகளின் உரிமைகளையும் கண்ணியத்தையும் பாதுகாக்கும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்படுகின்றன.

### எதிர்காலப் பொறுப்பு

இந்த முயற்சி பாராட்டத்தக்கது. ஆனால், இது சில மாவட்டங்களில் மட்டுமே நிலைத்திருக்கக் கூடாது. நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும், குறிப்பாக கிராமப்புறங்களில், இந்த மாதிரியான சேவையை விரிவாக்குவது அவசியம். மேலும், நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள ஆயிரக்கணக்கான வழக்குகளுக்கு விரைவான தீர்வை வழங்கும் வகையில், சிறப்பு அமர்வுகள், தனித்துறை நீதிபதிகள், குழந்தை நலக் குழுக்கள் ஆகியவை வலுப்படுத்தப்படவேண்டும்.

மிக முக்கியமாக, குழந்தைகள் மற்றும் பெண்கள் தொடர்பான வழக்குகளை ஊடகங்கள் எவ்வாறு சித்தரிக்கின்றன என்பது ஒரு பெரிய கேள்வி. பாதிக்கப்பட்டவர்கள் இரண்டாவது முறையாக பாதிக்கப்படாதபடி, நெறிமுறை கொண்ட ஊடக நடைமுறைகளும் அவசியம்.

### பெரிய மாற்றத்தின் தொடக்கம்

ஒரு நாடு எவ்வளவு வலிமையானது என்பதை அதன் பெண்கள் மற்றும் குழந்தைகள் எவ்வாறு பாதுகாக்கப்படுகிறார்கள் என்பதிலிருந்தே தீர்மானிக்கப்படுகிறது. அவர்கள் மீது வன்முறை நிகழ்ந்தும், நீதி கிடைப்பது தாமதமாக இருந்தால், அந்த நாடு நாகரிகமானதாகச் சொல்லப்படமுடியாது.

இப்போது தொடங்கப்பட்டுள்ள புதிய சேவை, ஒரு சிறிய படியாக இருந்தாலும், மிகப் பெரிய மாற்றத்தின் தொடக்கம் ஆக வேண்டும். யூனிசெஃப், ஐரோப்பிய ஒன்றியம், ஆளும்தரப்பு இணைந்து உருவாக்கிய இந்த முயற்சிகள், நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் நடைமுறைக்கு வந்தால், நல்ல முன்னேற்றம் ஏற்படமுடியும்.

ஆளும்தரப்பு மற்றும் குடிமக்கள் இருவரின் பொறுப்பும் ஒன்று தான்: பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது வன்முறை நிகழாத ஒரு எதிர்காலத்தை உருவாக்குவது.

---

இலங்கையின் இறையாண்மையை மீறி

# அணு சக்தித் துறையில் ரஷ்யா ஒருபோதும் திணிப்புச் செய்யாது

## அந்த நாட்டுத் தூதுவர் தெரிவிப்பு

ரஷ்யா அணுசக்திதுறை ரீதியான வளர்ச்சியில் இலங்கையுடன் ஒத்துழைக்க தயாராக இருக்கின்றபோதும் நாட்டின் இறையாண்மை மீறும் வகையில் எவ்விதமான திணிப்பையும் செய்யாது என்று இலங்கைக்கான ரஷ்ய தூதர் லெவன் செகார்யன் தெரிவித்தார்.

இலங்கையில் அணுமின் நிலையம் அமைப்பது தொடர்பில் செய்தியாளர்களிடம் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது தரப்பில் இலங்கையின் அணுசக்தித்துறையுடன் இணைந்து செயற்படுவதற்கும் அதற்கான வளர்ச்சி தொடர்பிலும் ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாராகவே உள்ளோம். அணு மின் நிலையம் அமைப்பதற்கான திட்டம் குறித்து உரையாடுவதற்காக இலங்கை எரிசக்தி அமைச்சருடன் ஒரு சந்திப்பை மேற்கொள்வதற்கு முயற்சிகளை எடுத்துள்ளோம்.

முந்தைய மற்றும் தற்போதைய ஆளும் தரப்புக்களின் கீழ், இலங்கை அதன் எரிசக்தி துறையில் அணுசக்தி திட்டங்களை முன்மொழிந்துள்ளது. முந்தைய ஆளும்தரப்பு 900 மெகாவாட் திறன் கொண்ட மூன்று அணுமின் நிலையங்களை நிர்மாணிப்பதற்கு முன்மொழிந்துள்ளது.

முன்னதாக, முன்னாள் எரிசக்தி அமைச்சர், கடந்த ஆண்டு ரஷ்யாவின் அரச அணுசக்தி நிறுவனமான ரோசாட்டமின் உயர் நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார். அதன் பின்னர், அவர் ரஷ்யாவின் மூத்த அயலுறவு அமைச்சின் அதிகாரிகளைச் சந்தித்தபோது இலங்கையில் அணுமின் திட்டங்களை நிர்மாணிப்பதற்கான யோசனைகளை முன்வைத்தார்.

முதலில் ஒவ்வொன்றும் 55 மெகாவாட் கொண்ட இரண்டு அலகுகள் கொண்டு 110 மெகாவாட் திறன் கொண்ட சிறிய அணு மின் நிலையத்தை அமைக்கும் திட்டம் காணப்படுகின்றது. அதேநேரத்தில் தேவையைப் பொறுத்து குறித்த திட்டத்தின் கீழ் ஆறு அலகுகளாக விரிவுபடுத்தும் விருப்பத்தையும் இலங்கை வெளிப்படுத்தியுள்ளது.

எவ்வாறாயினும், நான் எப்போதும் சொல்வது போல் 'பந்து' உங்களிடம்தான் உள்ளது. அதாவது நாட்டின் நீதிமன்றத்தின் தீர்மானத்தில்தான் உள்ளது என்றார்.

இதேவேளை, ரஷ்யா-உக்ரைன் போர் குறித்து கருத்து தெரிவித்த அவர், மேற்கத்திய சக்திகளின் அழுத்தம் இருந்தபோதிலும் இலங்கையின் நடுநிலை நிலைப்பாட்டை ரஷ்யா பாராட்டுகிறது என்றார். இந்தப் போரில் எந்த சக்தியும் ரஷ்யாவை தோற்கடிக்க முடியாது என்றார்.

# சுற்றுலாவிகளை மையப்படுத்திய ஓட்டோ சாரதிகளுக்குப் பயிற்சிகள்

சுற்றுலாப் பயணிகளை மையப்படுத்தி செயற்படும் முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு சிறப்பு பயிற்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக கிளீன் சிறிலங்கா செயலகம் அறிவித்துள்ளது.

அரசுத் தலைவர் அநுரகுமாரவின் மேலதிக செயலாளர் சுகீஸ்வர இது தொடர்பில் தெரிவித்ததாவது:

நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு பெரும்பாலும் சரியான முச்சக்கரவண்டிப் போக்குவரத்து வசதிகள் இல்லை என்றும், சில சேவை வழங்குநர்களிடையே பலவீனங்கள் காணப்படுவதாகவும் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

அத்தோடு சுற்றுலாப் பயணிகள் சில தருணங்களில் சிரமங்களுக்கும் முகங்கொடுக்கின்றனர். குறிப்பாக நியாயமற்ற முறையில் அதிக கட்டணம் வசூலிக்கப்பட்ட சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இத்தகைய நடைமுறைகள் சுற்றுலாத் துறையின் வளர்ச்சியைத் தடுக்கின்றன. நாட்டின் சர்வதேச பிம்பத்தை சேதப்படுத்துகின்றன.

ஆகவே இத்தகைய நிலைமைகளுக்கு தீர்வளிக்கும் முகமாகவே சுற்றுலாத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு பயிற்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. அதன் முதற்கட்டமாக, சுற்றுலாப் பயணிகளுக்கு சேவை வழங்கும் நாடாளவிய ரீதியில் உள்ள 10,000 முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது. அதன் பின்னர் அவர்களுக்கு உத்தியோகபூர்வமான சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன என்றார்.

# அரசுத் தலைவருக்கு பாபு சர்மாவின் ஆசி

அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க பதவியேற்று ஓராண்டு பூர்த்தியாவதை முன்னிட்டு சர்வதேச இந்து மத பீடம் சார்பாக அதன் செயலாளர் கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா ஆசி தெரிவித்துள்ளார்.

அவரது ஆசிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கிராமங்கள் தோறும் வறுமை ஒழிப்பில் ஈடுபட்டு அவர்களது வாழ்க்கையை வளமாக சமத்துவமாக வாழ்வதற்காக அவரது எண்ணக்கருவும், சகல மதங்களையும் மதிப்பளித்து இன மத பேதமற்ற நாட்டை உருவாக்கவும் மத நல்லிணக்கத்தின் மூலம் நாட்டை கட்டி எழுப்பவும் உறுதி கொண்டிருக்கும் அரசுத் தலைவர் அவரது எண்ணக்கருவுக்கு அமைய எல்லோரும் ஒரு தாய் இலங்கை நாட்டு மக்களாக வாழக்கூடிய உரிமையுடன் தங்களின் எண்ணங்களை வெளிப்படுத்தக்கூடிய நாடாக உருவாக்கும் அவரது முயற்சி கைகூட வேண்டும்.

அதேபோல "கிளீன் சிறிலங்கா" எனும் உன்னதமான என்ன கருவுக்கு அமைய நாட்டை அழகுபடுத்தி மக்களை பலப்படுத்தி ஒரு சிறந்த முன்னுதாரணமாக இலங்கை நாட்டை கொண்டு வரும் அவரது முயற்சிக்கு நாங்கள் கைகோர்ப்பமாக மேலும் அவரது சேவை சிறப்புற எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்தித்து ஆசீர்வதிக்கின்றோம் என்றுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# திலீபனின் ஆவணக் காப்பகம் திறந்து வைப்பு

தியாக தீபம் திலீபனின் வரலாற்றினை எதிர்கால சந்ததியினருக்கு கடத்தும் முகமாக அவரின் வரலாற்றினை எடுத்தியம்பும் 'பார்த்திபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக!!' எனும் தொனிப்பொருளுடன் கூடிய ஆவணக்காட்சியகம் இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டது.

நல்லூரிலுள்ளதியாகதீபம்திலீபன்நினைவாலயம் முன்றலில் இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணியளவில் மாவீரர் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் திறந்து வைக்கப்பட்டது.

தியாக தீபம் திலீபனின் பிரதான தூபி முன்றலில் மலரஞ்சலி செலுத்தப்பட்டு வரலாற்று ஆவணக் காட்சியகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆவண காட்சியகத்தில் தியாக தீபம் திலீபனின் திருவுருவச்சிலை மூத்த போராளி பஷீர் காக்காவால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டதுடன் சுடரேற்றி மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

தியாகதீபம்திலீபனின்வரலாற்றுபுகைப்படங்கள், பத்திரிகை ஆவணங்கள் என்பன தொகுக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டது.

இதன்போது மாவீரர்களின் பெற்றோர், அரசியல் தலைவர்கள், சிவில் சமூகத்தினர், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

நேற்றுத்திறக்கப்பட்ட இந்த ஆவண காப்பகத்தில் தேசியமக்கள்சக்தியின்யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவனும் அஞ்சலி செலுத்தினார்.

ஆவண காப்பகத்துக்கு வருகை தந்த தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தியதோடு ஆவண காப்பகத்தையும் பார்வையிட்டார்


















## ரணில்,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுத்தலைவர்களுக்குரியசிறப்புரிமைகளை நீக்கியதால் அநுரவிடமுள்ள மஹிந்தவின் வாக்குகள் குறைவடையும். எனவே இவர்கள் இருவரும் இணைந்தால் பேரூந்து நிரம்பிவிடும்.

பின்னர் எமக்கும் அங்கு இடமிருக்காது. கடந்த அரசுத்தலைவர் தேர்தலில் இணைந்து களமிறங்கியிருந்தால் 66 இலட்சம் வாக்குகளைப்பெற்றுஆட்சியமைத்திருப்போம். எனவே இனியாவது ஒன்றிணையுங்கள். இருதரப்பும் இணையாமல் எம்மிடம் பேச்சுக்கு வர வேண்டாம் என்றார்.

## போக்குவரத்துச் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை போக்குவரத்து சபையில் பெண் ஊழியர்கள் உட்பட 450 சாரதிகள் மற்றும் 300 நடத்துனர்களை நியமிக்க ஆளும்தரப்புதிட்டமிட்டுள்ளதாகவும்அதற்கான நேர்காணல்கள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும்பெண்களைபணியமர்த்துவதற்கு முன்பு அவர்களுக்கு போதுமான பாதுகாப்பு மற்றும் சுகாதார வசதிகளை உறுதி செய்ய வேண்டும் எனவும் கொழும்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலை பேருந்துகளில் பெண் ஊழியர்களை பணியமர்த்துவதே ஆரம்ப திட்டம் என்றும், இது கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## பல கட்சி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின்79ஆவதுதேசியமாநாட்டில் உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பல கட்சி ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணையவேண்டும். நான்கியூபாமற்றும் நியூயோர்க் நகரங்களுக்கு உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தேன். அங்கு சர்வதேசநாணயநிதியம், உலகவங்கி, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் உள்ளிட்ட பல முக்கிய தலைவர்களுடன் பூகோளஅபிவிருத்தியடைந்துவரும்நாடுகளின் கடன்பிரச்சினைகுறித்துகலந்துரையாடினேன். இதுஒருஅத்தியாவசியமானஉத்தியோகபூர்வ பயணம். பயண மாற்றங்கள் காரணமாக லண்டனில் ஒரு இரவு தங்க நேர்ந்தது. அங்கு கிடைத்த அழைப்பின் பேரில் ஒரு பல்கலைக்கழக நிகழ்விலும் பங்கேற்றேன். இவை அனைத்தும் உத்தியோகபூர்வ நிகழ்வுகளே. ஆனால், இந்த உத்தியோகபூர்வ பயணத்தை அடிப்படையாகக் கொண்டு, என்னைக் கைது செய்ய முயற்சித்தனர். அரசுத்தலைவரின்செயலாளரால்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதென பின்னர் அறிந்து கொண்டேன்.

நான் கைது செய்யப்பட்ட போது, எனது நண்பர்கள்மட்டுமல்ல,அரசியல்எதிரிகளும்கூட ஜனநாயகத்தைப்பாதுகாப்பதற்காக எனக்காக ஒன்றிணைந்தனர். இந்த ஒற்றுமைக்கு நன்றி தெரிவிக்கவே இந்த மாநாடு பிரதானமாக ஏற்பாடு செய்யப்பட்டது.

முன்னாள் அரசுத் தலைவர்களான மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, சந்திரிகா பண்டாரநாயக்க மற்றும் கோட்டாபய ராஜபக்ச உட்பட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, மற்றும் பல்வேறு அரசியல் தலைவர்களும் எனது கைதுக்கு எதிராக ஒன்றிணைந்தனர். நாம் அனைவரும் தற்போது ஒன்றுபட்டுள்ளோம். தற்போதைய ஆளும்தரப்பால் முன்னெடுக்கப்படும் அரசமைப்புரீதியான அடக்குமுறைகளை நாம் அனைவரும் ஒன்றிணைந்து எதிர்கொள்ள வேண்டும்.

ஆளும்தரப்புசர்வாதிகாரத்தைநிலைநிறுத்த முயற்சிக்கிறது. பல கட்சி ஜனநாயகத்தை அழிக்க முயல்கிறது. நாட்டின் 77 ஆண்டுகால ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகளாலேயே அநுரகுமார இன்று ஆட்சி செய்வதற்கு ஒரு நாடு எஞ்சியிருக்கிறது. ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை நாம் எதிர்க்கவில்லை, ஆனால் ஆளும்தரப்பின் நடவடிக்கைகள்எதிர்க்கட்சிகளைஅடக்குவதை நோக்கியே செல்கின்றன.

நாம் பயந்து அடிபணிவோம் என ஆளும்தரப்பு நினைக்கிறது. ஆனால், நாட்டில் பல கட்சி ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டுமானால்,நாம்அனைவரும்தொடர்ந்து ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். இந்த செய்தியை கிராமப்புறங்களுக்கும் கொண்டு செல்ல வேண்டும். எனவே, கிராமிய மட்டங்களில் ஒன்றிணைந்த கூட்டங்களை நடத்தி, இந்த அரசியல் பயணத்தை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும் என்றார்.

**காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு**

**076 3983858**

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.09.2025இல் வெளியிடப்பெற்றது